Regd. No. M. 4900. 8-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-1-0.

குடி அரசு

ESTD. 1924

வருட சந்தா உள்நாடு ரூ. 4-0-0. வெளிநாடு ரூ. 6-0-0.

மாலை 21 ஈரோடு 25-10-1947 சனிக்கிழமை மலர் 7.

★ வேண்டாம்! விபரீதம். ★

★

"நாம் சுதந்திரம் அடைந்து விட்டோம்" இது அருப்புக்கோட்டையில் அமைச்சர் பக்தவத்சலனார் கூறியது. அயோத்தி இராமனுக்கு, அந்நாட்டில், அந்நாளில், தலை சிறந்த "வசிஷ்ட மகரிஷி" பட்டாபிஷேகத்திற்கு நாழிகை குறித்தார் என்று இராமாயணத்திலுள்ளது போல, இந்தியத் துணைக்கண்டத்தில் இந்நாளில் தலைசிறந்த பஞ்சாங்க வீரர்கள் நாழிகை குறித்துக் கொடுக்க, இங்கிலாந்து மன்னர் இந்நாட்டிற்கும் மன்னராயிருக்க, பழைய அரசப்பிரதிநிதியாகிய மவுண்ட்பேட்டன் துரையே, இந்நாட்டிற்கு நிர்வாகத்தலைவராய் இருக்க, முடிசூடா மன்னன் ஜவஹர் முடி சூடாமலே இருக்க, நாடு சுதந்தரமடைந்த உண்மையை நாம் அதற்குள்ளாகவா மறந்து விட்டோம்? இல்லை; நாம் தான், மறக்கத்தான முடியுமா? மறக்க முயன்றாலும், ஆகஸ்டு பதினைந்தில் காங்கரசார் ஊருக்கு ஊர் செய்திருக்கும் ஆரவாரம், நம் சிறுவர்கள் தின்றிருக்கும் சீனி மிட்டாய்; நம்மை மறக்க விட்டு விடுமா?

இவ்வாறிருக்க இதையேன் அவர் கூற வேண்டும்? பசித்தவனுக்குப் பசி ஆறிவிட்டதென்று பிறர் சொல்லித்தானா தெரியவேண்டும் பசித்தவனுக்கே அது தெரியுமே? ஏன் அவர் கூறுகிறார்? கூறுவதற்குக் காரணம் என்ன?

அருப்புக்கோட்டை மாநாட்டிற்குப் போயிருந்த அமைச்சர், அங்கங்கே சிற்சில இடங்களில் வேறு வேறு கொடிகள்—குறிப்பாகக் கருப்புக்கொடிகள் கண்ணுறப் பறப்பதைக் கண்டிருக்கலாம், கண்டதால் கருத்தை இழந்திருக்கலாம். கருத்தை இழந்ததால், "நாம் சுதந்தரமடைந்துவிட்டோம்" என்ற பல்லவியை பீடிகையாகக் கொண்டு, அநுபல்லவி, சரணம் அமைத்திருக்கலாம்.

பல்லவி. (எடுப்பு)

நாம் சுதந்தரமடைந்து விட்டோம்

அநுபல்லவி. (மேலெடுப்பு)

தேசியக்கொடிக்குப் போட்டியாகவோ ஒப்பாகவோ, வேறு எக்கட்சிக்கும் எவ்வகுப்பிற்கும் எச்சமயத்திற்கும் உரியதான கொடியைப் பறக்க விடுவதற்கு அனுமதிஅளிக்க முடியாது. முடியாது; மூக்காலும் முடியாது.

சரணம் (அமைதி)

மற்றைய நிலையங்கள் தத்தம் கொடிகளை வைத்துக்கொள்ளலாம். ஆனால் அவைகள் தத்தம் கொடிகளைப் பறக்க விடக் கூடாது.

பல்லவி அநுபல்லவிகள், பாட்டாக இல்லாமல், வசனமாக இருக்கிறதே; இது என்ன புதுமலர்ச்சிக் கவிதையா? என்றெல்லாம் கேட்டுவிடப் போகிறீர்கள்? கருத்திழந்து கதறுகின்ற நிலையிலே, கானத்தை நாம் எதிர்பார்க்கக்கூடாது. எதிர்பார்த்தால் நாம்தான் ஏமாற்றமடைய வேண்டும்.

இனி, அவரின் கருத்திழந்த கதறலை நாம் கவனிப்போம். சாதாரண ஒருவரின் கருத்திழந்த கதறலாயிருந்தால், நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை. அவரோ மந்திரி யார்? மராமத்து மந்திரி யார்; மந்திரி, மராமத்து வேலைக்குத் தகுதியுடையவரோ இல்லையோ? நாமறியோம். ஆனால் அவர் தன்னைத் தானே முதலில் மராமத்துச் செய்து கொள்ளவேண்டுமென்று கூற ஆசைப்படுகின்றோம். அதனால் தான் மந்திரியாரின் இப்பேச்சை வேண்டாம்; விபரீதம் என்று விலக்குகின்றோம்.

தேசியக் கொடி

தேசியக்கொடி—காங்கரஸ் கட்சியாரின் மூவர்ணக்கொடி,—அதுதான் பத்தாம் பசலிக் கைராட்டினத்தை அக்கு வேறாய் ஆணி வேறாய்க் கழற்றி, அதன் உருளையை மட்டும் பதித்து, அசோகனின் ஆணைச் சக்கரம் என்ற பெயரோடு, 1947 ஆகஸ்ட்டு முதலாய், சந்திக்குச் சந்தி நிற்கும் கொடியைத்தான்—நாம் நாள் தோறும் பார்த்துவரும் கொடியையே தான் அமைச்சர் 'தேசியக் கொடி" என்று, நமக்கு எடுத்துக்கூறுகின்றார். நாடு சுதந்தரமடைந்ததை நாம் எவ்வாறு உணர்வோமோ, அதே போல மூவர்ணக்கொடி, தேசியக் கொடியானதையும் உணர்வோம். இக்கொடி தான் நம்மை இப்பொழுது ஆளுகின்றது. ஆனால்;

நேற்று—இதற்கு முன்பு நம்மை ஆண்ட கொடி; அதற்கு முன்னால், நம்மை—நம் நாட்டை ஆண்ட கொடி எத்தனை எத்தனையோ? இது நமக்கும் தெரியும்; அமைச்சரவர்களுக்கும் தெரியும்.

எது வேறு கொடி?

தேசியக் கொடிக்குப் போட்டியாகவோ, ஒப்பாகவோ பறப்பது வேறு எக்கட்சியின் கொடி? எவ்வகுப்பின் கொடி? எச்சமயத்தின் கொடி?

காங்கரஸ் கொடி, திராவிடர் கொடி, கம்யூனிஸ்க் கொடி, சம்மேளனக்கொடி, லீக் கொடி, மகாசபைக் கொடி ஆகிய இவைகளைத் தானே, கட்சிக்கொடி அல்லது வகுப்பின் கொடி என்று அமைச்சர் குறிப்பிடவேண்டும்; நாமும் கருதவேண்டும்.

தேசியக் கொடி பிறப்பதற்கே, அடிப்படையான காங்கரஸ் கொடியின் மீதும், காங்கரசின் காதற்கிழத்தியான கம்யூனிஸ்க் கொடியின் மீதும், காங்கரசிற்குக் குற்றேவல் செய்யும்

மானம் அழிய, வாழான் திராவிடன்!

அம்பேத்காரைத் தலைவராகக்கொண்ட சம்மேளனக் கொடியின் மீதும், காங்கரசின் கடைக்கண் எப்போது தன்மேல் விழும் என்று ஏங்கி எதிர்பார்த்து நிற்கும், இந்திய யூனியனிலுள்ள லீக் கொடியின் மீதும், காங்கரசின் உடன்பிறப்பான மகாசபைக் கொடியின் மீதும், அமைச்சரின் பார்வை சென்றிருக்க முடியாது. சென்றிருக்கவேண்டிய அவசியமும் இல்லை. எஞ்சியிருக்கும் கொடி திராவிடக்கொடி. அதனால்தான், குறிப்பாகக் கருப்புக்கொடிகள் பறப்பதைக் கண்டு கருத்தை இழந்திருக்கலாம் என்று கருதினோம்.

மருட்சி

இது உண்மையாயிருந்தால், இக்கருப்புக்கொடியைக் கண்டு அமைச்சர் ஏன் மிரளவேண்டும்? இந்த மருட்சியிலே, "அந்தோ! சமயக்கொடி" என்று வேறு குறிப்பிடுகின்றார்.

உமையொருபாகனுக்குக் காளைக் கொடி, திருமகளைத் தன் மார்பு மேல் தாங்கியிருக்கும் திருமாலுக்குக் கருடக் கொடி, நாமகளைத் தன் நாக்கிலேயே குடிவைத்திருக்கும் நான்முகனுக்கு அன்னக்கொடி, வள்ளி தெய்வயானைகளின் மணாளனுக்குச் சேவற்கொடி, இத்தியாதி இத்தியாதி கொடிகள், சமயக் கொடிகள். இச்சமயக்கொடிகள் கூடப் பறக்க உரிமையில்லை என்கின்றார், கருப்பைக்கண்டு கருத்துச் சிதறிய அமைச்சர். மும்மூர்த்திகளுக்கும் அவர்களின் வம்சாவளிக்கும் கொடி வேண்டுமா? வேண்டியதில்லையா? இதை அத் தேவாதிதேவர்களே ஒரு மாநாடு போட்டு முடிவு கட்டட்டும்; மோதிப் பார்க்கட்டும். இல்லை அந்தராத்மாவாக வந்து அடிமைக்குக் கூறட்டும், நமக்குக் கவலையில்லை. ஆனால் கருப்புக் கொடியைக் கண்டு, ஏன் கவலையுறவேண்டும்? தேசியக்கொடிக்கு ஒப்பாகவோ போட்டியாகவோ, பறக்க உரிமையில்லை என்று, பறக்கச்செய்யும் வாயுவிற்கு ஏன், வார்சுதாரர் ஆகவேண்டும்.

"போட்டி" "ஒப்பு"

தேசியக் கொடிக்குப் போட்டியாகவோ, ஒப்பாகவோ என்று கூறியிருக்கின்றார். போட்டி, ஒப்பு, எவ்வகையில் என்பதற்கு, விளக்கங்காணோம். கருப்பினால் கருத்திழந்து, பேசியிருக்கும் அமைச்சர் அவர்களே! கவலைப்படாதீர், எமது ஆறுதலைக் கேளும்; தெளிவடையும்.

மூவர்ணக்கொடியான தேசியக்கொடிக்கு—இந்திய யூனியன் கொடிக்குப் போட்டியாகக் கருப்புக்கொடி பறக்கின்ற காலம் இது இல்லை. திராவிடர்கள் பெரும்பாலோர் திரண்டெழுந்து "போட்டி சர்க்கார்" ஒன்றை அமைக்கும் நேரத்தில்தான் போட்டியாகக் கருப்புக்கொடி பறக்கமுடியும்.

இந்திய யூனியன் கொடிக்கு ஒப்பாகக் கருப்புக்கொடி பறக்கின்ற காலமும் இது இல்லை. "திராவிடநாடு திராவிடருக்கே" உரிமையாகும் காலத்தில்தான், இந்திய யூனியன் கொடிக்கு மட்டுமல்ல; உலகத்திலுள்ள எந்தக் கொடிக்குமே ஒப்பாகக் கருப்புக்கொடி-அதன் வழியுண்டாகும் புதுக்கொடி பறக்கும். அதைத்தடுக்க உம்மாலு முடியாது, உமது மதிப்பிற்குரிய பார்ப்பனர்களின் மந்திர தந்திரங்களாலும் முடியாது; ஏன்—நீர், வீழ்ந்து கிடக்கும் பனியா ஏகாதிபத்தியத்தாலும், பனியாவைப் பாதுகாக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தாலுமே முடியாது. ஏன் வீண் கவலை. கவலையை விட்டொழியும். ஒப்பாகவோ போட்டியாகவோ பறக்கும் நிலையில், நீர் ஒதுக்கப்படவும் மாட்டீர். ஏன், நீரும் ஒரு திராவிடர்தானே?

வரலாற்று உண்மை

திராவிடர் தாங்கும் கருப்புக்கொடி, இழிவுக்கொடி; இழிவையுணர்த்த அடையாளமாகப் பறக்கும் கொடி; இழிவை—அடிமையைப் போக்கப் பாடுபடுவதற்கு உற்சாகத்தைத் தரும்கொடி. மனிதன் மனிதனாக வாழும்பொருட்டு, இரத்தத்தைச் சிந்தியே தீரவேண்டும் என்று செப்பும்கொடி. இழிவு அகன்றால் மாறுங்கொடி. இத்தகைய கருப்புக் கொடியைப் பறக்கவிடமுடியாது என்று பதறாதீர். பாதுகாப்புச் சட்டமும் மலபார் போலீசாரும், ஏகாதிபத்தியத்தை—ஹிட்லரிஸ ஆட்சியைத் தாங்கிக்கொண்டே நிற்கமுடியாது. தாங்குவதுபோல காணப்படலாம். நம்பாதீர். காலப்போக்கில் அவைகளே தரையோடு தரையாய்ச் சாய்ந்துவிடும். இது வரலாறு காட்டும் உண்மை மட்டுமல்ல, வரலாறு காட்டவேண்டிய உண்மையுமாகும்.

இந்திய யூனியன் கொடி

இந்திய யூனியன் கொடியான மூவர்ணக்கொடியைத், திராவிடக் கழகத்தார் திராவிடநாட்டுக் கொடியாக ஏற்க முன்வரமாட்டார்களேயன்றி இந்திய யூனியன் கொடியாக ஏற்பதிலோ, அதைப் பெருமைப்படுத்துவதிலோ சற்றும் பின்வாங்கமாட்டார்கள். இப்பொழுது இந்திய யூனியன்கொடி, திராவிடநாட்டிலே சீரழிகிறது, என்பதை உணர்ந்தால், சீரழிவை நீக்குங்கள் அதைப் பெருமைப் படுத்துங்கள். அதற்கானவற்றை விரைந்து செய்யுங்கள்.

அரசாங்கத்தின் அடையாளமான கொடியை யார்தான் கையாளுவது என்ற நியதி இல்லையா? கதராடையைக் கட்டியும் கட்டாமலும், 'காங்கரஸ் லேபிளை' குத்திக்கொண்டும் குத்திக்கொள்ளாமலும், காங்கரஸ்காரர் என்று கபடநாடகமாடுகின்ற கண்ணியவான்களே, உண்மையாய் இந்திய யூனியன் கொடியை அவமானப் படுத்துகின்றார்கள்; சீரழியச் செய்கிறார்கள்.

பெருமை சிறுமை

ஒரு ஊரில் ஒரு கோவில் இருந்தால், அக்கோவில் ஆஸ்திகர்களாலே போற்றப்படும், பாதுகாக்கப்படும். இப்பொழுது காணப்படுவதுபோலே சந்துக்குச்சந்து கோவில் என்ற நிலையால் போற்றுவோரும் காப்பவருமின்றிச் சந்தி சிரிக்கிறதைப்பார்க்கின்றோம்.

வானஊர்தி ஒன்றைக் கண்டவர்கள், முதலில் அதைப் பார்ப்பதிலேயே ஆனந்தங்கொண்டார்கள். ஊர்தி வருகின்ற ஒலியைக் கேட்டவுடனே, செய்து கொண்டிருந்த அலுவல்களையெல்லாம், செய்தவாறே விட்டுவிட்டு,—உண்டு கொண்டிருந்தவர்கூட உணவை விட்டுவிட்டு, ஓடிவந்து காண்பதிலே உற்சாகங்கொண்டார்கள். ஊர்தி பலவாகப் பலவாக, அவ்வுற்சாகம் சப்பிட்டுப் போனதைப் பார்க்கின்றோம்.

திருடுகின்றவனுக்கும் ஒரு சின்னம், திருட்டைப் பிடிப்பவனுக்கும் ஒரு சின்னம், என்ற நிலைமை இருக்கலாமா? இருக்கத்தான் வேண்டும்; இதுதான் 'ஜனநாயகம்' என்றால் நமக்குக்கவலையில்லை.

இரக்கமில்லையா?

ஆனால் மனதில் சிறிதாவது ஈரப்பசை இருக்குமென்று ஒரு ஆலோசனையைச் சொல்லுகின்றோம். ஒரு வருஷத்திற்கு 5 கஜம் துணி கொடுத்து, மக்களை அரை ஆடை, கால் ஆடைக்காரர்களாய் ஆக்கிவிட்ட உங்கள் "ராமராஜ்ஜியம்" அரை, கால் என்ற நிலைமைமாறி முழு ஆடை என்ற நிலைமை வருகிறவரையாவது; ஊருக்கு ஒரு "யூனியன்" கொடி என்ற ஏற்பாட்டை விரைந்து செய்யுங்கள். ஆடை பற்றாக்குறையினாலே "அக்கு அக்காய்" கிழியும் மட்டும் தைத்தாவது உடுத்தவேண்டும் என்ற நிலைமையை ஒரு பக்கத்திலே வளர்த்துவிட்டு, ஒவ்வொரு நகரிலும் ஆயிரமாயிரமாகக் கொடிகள் பறக்க அனுமதி செய்யலாமா? சிறிது பச்சாதாபமுள்ளவர்கள்கூட, மாற்றுடை இல்லாமல் மழையில் நனைந்து, ஆடையே இல்லாமல் வாடையில் அவதிப்பட்டு, வருந்தும் ஏழைகளைச் சீச்சி என வெருட்டவேண்டிய கட்டாயம், ஆடைப் பஞ்சத்தால் நாட்டிலே உண்டாகிவிட்டது. ஏழைகளுக்கும் நாட்டிலே குறைவில்லை. குளிரால் வருந்துகின்ற ஏழைக் கோவணாண்டி, ஆயிரமாயிரமாகப் பறக்கின்ற கொடிகளைப் பார்த்தால்—ஆடையில்லையே என அகமுருகிப் பார்த்தால், என்ன நினைப்பான்?

[தொடர்ச்சி 8ம் பக்கம்]

கோபிப்பதில் பயனில்லை

கண்டதைச் சொல்லுகிறேன்.

[ஊர் சுத்தி]

"அற்பனுக்கு வாழ்வு வந்தால் நடுராத்திரியில் குடைபிடிப்பானாம்" என்று கூறுவதைக் கேட்டிருக்கிறேன். ஆனால் பட்டப்பகலில் எல்லாக் கதவுகளும் ஜன்னல்களும் திறந்துவிடப்பட்டிருந்தும், போதுமான வெளிச்சமும் காற்றும் தாராளமாக இருந்தும், ஏராளமான மின்சார விசிறிகள் சுற்றிக்கொண்டிருப்பதையும், மின்சார விளக்குகள் எரிந்து கொண்டிருப்பதையும் கண்டு, அதன் கீழ் வீற்றிருக்கும் மகானுபாவர்கள் யார் எனப்பார்த்தேன். வரிசையாக பிரபுக்கள் வீட்டிலிருக்கும் "குஷன்களை"விட உயர்ந்தரகமான குஷன்கள் போடப்பட்டிருந்தன. அவைகளில் அனேகம் காலியாகவே காட்சியளித்தன. ஒரு சில இடத்தில் புளிமூட்டை போன்ற உருவம் படைத்த சிலர், புரண்டு புரண்டு வேதனைப்பட்டு உட்கார்ந்திருந்தனர். மற்றும் சில இடத்தில், கொட்டாவி விட்டுக்கொண்டு தூங்காமற் தூங்கிச், சுகம் பெற்றுக்கொண்டிருந்தனர் சிலர். ஓரியாக (தனியாக) உட்கார்ந்திருடபவர்களில் சிலர் பத்திரிகை படிப்பதும், சிலர் கடிதம் எழுதுவதுமாகப் பொழுது போக்கிக்கொண்டிருந்தனர். இப்படியெல்லாம் இருந்தபோதிலும் ஏதோ சிலபேர், சரியாக உட்கார்ந்து கவனிப்பவர்கள்போல் தென்பட்டார்கள்; ஆனாலும் அவர்கள் அடிக்கடி கடியாரத்தைப் பார்ப்பதும், தலையைச் சொரிவதுமாய் இருந்ததிலிருந்து அவர்களுக்குப் பாவம் ஆங்கிலம் தெரியாத காரணத்தால் என்ன பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பது புரியாமலே — ஆனாலும் நடவடிக்கைகளைக் கவனிப்பதுபோல் இருந்து கௌரவத்தைக் காப்பாற்றிக்கொண்டிருக்கிறார்கள் எனப் புரிந்துகொண்டேன். என்னடா! உன்பாட்டுக்கு எதையோ வளர்த்திக்கொண்டு போகிறாயே! எங்கே நடப்பவைகள் இவையெல்லாம் என்றா கேட்கிறீர்கள்? ஏதோ கள்ளமார்க்கெட்டுக்காரர்களெல்லாம் தின்று கொழுத்து விட்டுப் பொழுதுபோக்கும் இடத்தைப் பார்த்துவிட்டு அங்கு நடப்பதைக்கூறுவதாக நினைத்துவிடாதீர்கள்! இதோ சொல்லிவிடுகிறேன். மேற்கண்ட காட்சிகளை நான் கண்டது நமது "ஊழியர்"கள் நமக்காகத் தொண்டு புரிவதற்கான சட்டதிட்டங்களை வகுக்கும் சட்டசபையில்!

எம். எல். ஏ-க்கள் சங்கதிதான் இப்படியென்றால், மந்திரிமார்கள் விஷயமோ இவைகளைவிட மோசம். நாடகத்திலே—சினிமாவிலே ஆண்டவன் காட்சியளித்து மறைவதுபோல, பிரதமர் வந்து சிறிதுநேரம் அமர்ந்து அவைவருக்கும் காட்சியளித்துவிட்டுச் சென்றுவிட்டார். மற்ற மந்திரிமார்கள் வருவதும், சற்று உட்காருவதும், சிறிதுநேரத்தில் போவதுமாய் இருந்தனர். ஐயோ! பாவம். சட்டசபைத் தலைவர் மாத்திரம் உட்கார்ந்த இடத்தை விட்டு, எங்கும் போவதற்கில்லாத தோடு டிரில் வகுப்பில் (Sit, Stand) உட்கார், எழுந்திரு என்று பயிற்சியளிக்கும்போது நடக்கும் மாணவன்போல், டிரில் பழகிக்கொண்டிருப்பதைக் கண்டு பரிதாபப்பட்டேன். இவர் அமருவதற்கென, உயர்தரமான "சிம்மாசனம்" அளிக்கப்பட்டிருக்கிறதே தவிர, அது அவரது உயரத்திற்கு மீறினதாக இருப்பதால் அவரை மிகமிகக் குள்ளமானவர் என்று அதிகப்படுத்தி விளம்பரப் படுத்தியது. அதற்காகவும் பரிதாபப்பட்டேன்.

பிறகு, சற்று வெராண்டா (தாழ்வாரம்) பக்கம் போய்ப் பார்க்கலாம் என்று போனேன். அங்கே, எங்கு பார்த்தாலும் 4, 5பேர் கூடிக்கூடிப் பேசிக்கொண்டிருப்பதும், பக்கத்து அறைகளுக்குள் போவதும், வருவதுமாய் இருப்பதைக்கண்டு எனக்கு முதலில் ஒன்றுமே புலப்படவில்லை. நல்லவேளையாக எனக்குத் தெரிந்த ஒருவரைக்காண நேரிட்டது. அவரை விசாரித்த பின்னர்தான் எனக்குப் பூராச்சங்கதியும் விளங்கிற்று. அதாவது, பக்கத்து அறைகளெல்லாம் மந்திரிமார்கள் காரியாலயம்; வெளியில் சிறு சிறு கூட்டமாக நிற்பவர்களெல்லாம் எம். எல் ஏ-க்களின் சிபார்சைக் கொண்டு மந்திரிமார்களிடம் காரியம் சாதித்துக்கொள்ள வந்திருக்கிறவர்கள்; கையில் தோல்பை வைத்துக்கொண்டு அறைக்குள் போவதும், வெளியில்வந்து சமாதானம் சொல்லுவதுமாய் அலைபவர்கள்தான் சாட்சாத் பொதுஜனப் பிரதிநிதி எம். எல். ஏ-க்கள்!

இன்று நம்நாட்டு மக்களின் கவனம் பூராவையும் கவர்ந்திருக்கக்கூடிய ஜமீன்தாரி ஒழிப்பு மசோதாபற்றி சட்டசபையிலே பலத்த விவாதம் சிலரால் நடத்திக்கொண்டிருக்கும் வேளையில் தான், ரிவினியூ மந்திரி தவிர மற்ற எல்லா மந்திரிகளும், பல எம். எல். ஏ-க்களும் மேற்சொன்ன மாதிரி நடந்து கொண்டிருப்பதைக் கண்டேன். அதே நேரத்தில் பார்வையாளர்களின் காலரியைப் பார்த்தால், எள்போட்டால் கீழே விழ இடம் இல்லாத அளவுக்குப் பொது மக்கள் சபையின் விவாதத்தைக் கவனித்துக்கொண்டிருந்தனர்.

[குறிப்பு:—இதனை எழுதியவர், இக்காட்சி கற்பனை இல்லையென்றும் கண்டதையே எழுதினேன் என்றும் நமக்கு உறுதி கூறுகிறார். பாவம்! காங்கிரஸ் ஆட்சியிலுள்ள சட்டசபையை இப்பொழுதுதான் பார்த்திருக்கின்றார். பேசுகின்ற மொழியும், பேசப்படுகின்ற விஷயமும் தெரியாத மந்திரிகளும், மாதமுடிவில் சம்பளத்தையும், படி பணத்தையும் எதிர் பார்த்து இருக்கின்றோமேயல்லாமல் வேறு எதற்காக இருக்கின்றோம் என்பதே தெரியாத எம். எல். ஏ-க்களும் சுமார் 100க்கு 90 என்பதையும் இன்னொரு நாளைக்குப் போய் வந்து நிச்சயப்படுத்திக்கொள்வார் என்று நினைக்கின்றோம். ஆ-ர்]

அறிவிப்பு.

★

சுற்றுப்பிரயாண ஏஜண்டு தேவை.

நமது "குடி அரசு" விரைவில் 16 பக்கங்களுடன் வெளியிட ஏற்பாடாகி வருகிறது.

"குடி அரசு"க்கு ஏஜண்டுகள் இல்லாத ஊர்களில் சந்தாதாரர்களைச் சேர்க்கவும், விளம்பரங்கள் ஆர்டர்வாங்கி அனுப்பவும் தமிழ்நாடு பூராவுக்கு நாணய, பொறுப்புவாய்ந்த ஏஜண்டு ஒருவர் தேவை. மற்ற விபரங்களுக்கு உடனே எழுதவும்.

P. ஷண்முகவேலாயுதம்,
நிர்வாகி,
"குடி அரசு", ஈரோடு.

மதிப்புரை:

[மதிப்புரை வேண்டுவோர் இரு பிரதிகள் அனுப்பவேண்டும்.]

இன ஒலி

வரி ஒரு அணா.
வருடத்திற்கு 3—8—0
ஆசிரியர்: G. சீனிவாசன்

20 செட்டித்தெரு L. காஞ்சிவரம்.

திராவிடத் தனியரசு காணவேண்டிய வேட்கையில், திராவிட இனத்தின் ஒலியை, மக்களின் சிந்தனையில் பரப்புவதை நோக்கமாகக் கொண்ட வார இதழ்.

குடிஅரசு

25-10-47 சனிக்கிழமை

கிளர்ச்சியா?

★

திராவிடர் கழகம், இப்போது ஒரு அரசியல் கட்சி அல்ல என்றும், அது ஒரு பிரச்சார இயக்கமாகவே இருந்து வருகின்றதென்றும், அந்தப் பிரச்சாரத்திற்கு முக்கிய லட்சியம், திராவிடநாடு என்பதான, இப்போதைய சென்னை மாகாணம் ஒரு பூரண சுதந்திர அதாவது சென்னை மாகாணம், அரசியல், சமுதாய இயல், பொருளாதார இயல், கலை இயல், கல்வி இயல், ஆத்மார்த்த இயல் என்னும்படியான மதம், தர்மம் ஆகிய இயல் முதலானவைகளிலும், பாதுகாப்பு, வர்த்தகம், போக்குவரத்து, வெளிநாட்டு சம்மந்தம் ஆகிய இயல்களிலும், வெளி நாட்டான், மாகாணத்தான் முதலிய எவருடைய ஆட்சியும், ஆதிக்கமும் நடத்துதலும் சிறிதும் இல்லாத, முழு சுயேச்சை என்றதான, சுதந்திர நாடாக ஆகவேண்டும் என்பதும், அப்படிப்பட்ட சுதந்திர நாட்டில், பல் வகை இயல்களின் நடப்புத் திட்டம், சமுதாய பொருளாதார பேதம் அற்ற சமதர்மக் குடி அரசு நாடாக இருக்கச் செய்வதாகும் என்றும், 1938ம் ஆண்டு முதல் முழக்கி வருகின்றோம். இவற்றைக் குறிக்கோளாக வைத்தே, இதுவரை பல நூற்றுக்கணக்கான மகாநாடுகளும், ஆயிரக்கணக்கான கூட்டங்களும், நாடு, நகரம், பட்டி, தொட்டி முதலியவைகளில் கூட்டித் தீர்மானித்தும், பேசியும், பல பத்திரிகைகளில் எழுதியும், வருகின்றோம்.

மற்றும், சுதந்திரநாடு ஏற்பட்டதும் உடனடித் திட்டம் என்ன என்பதையும், எல்லா மக்களுக்கும் விளங்கும்படியாக, சேலம், திருச்சி மாகாண மகாநாடுகளில் தீர்மானித்துத் துண்டுப் பிரசுரமாகவும் வெளியிட்டிருப்பதுடன், 1934ம் ஆண்டில் ஜஸ்டிஸ் கட்சிக்கு, ஈ.வெ. ராமசாமி திட்டமிட்டுக் கொடுத்த திட்டம் என்னும் பேரால், சில திட்டங்கள் பல தடவை வெளியாக்கப்பட்டு வந்திருக்கின்றன. மற்றும் ஈரோட்டுத் திட்டம் என்பதாக, சுயமரியாதை இயக்கத்தின் லட்சியங்கள் என்னும் பேரால், 1933ல், காலம் சென்ற தோழர் சிங்காரவேலு அவர்கள் தலைமையில் செய்யப்பட்ட, சில திட்டங்களும் வெளியாக்கப்பட்டிருக்கின்றன. இவைகளைச் சிறிதும் மாற்றமில்லாமல், சிறிதும் தயங்காமல், பிரச்சாரம் செய்யப்பட்டு வருகின்றதுடன், இன்னமும் பிரச்சாரம் செய்வதையே இலட்சியமாகக் கொண்டு, திராவிடக்கழகம், இயக்க உருவமாக இருந்து வருகின்றது.

இந்தப் பிரச்சாரம் என்கின்ற தன்மையில், இயக்கமானது, அதாவது திராவிட கழகமானது, மக்கள் ஆதரவையும், இளைஞர்கள் மாணவர்கள் ஆதரவையும், பெற்றுவருவதோடு, தனது நிலையில் எவ்விதத் தவக்கமோ, விட்டுக் கொடுக்கும் தன்மையோ இல்லாமல், சிறிதும் களைப்பு இளைப்பு இல்லாமல், இயந்திரம்போல் பணியாற்றி, இன்று இந்நாட்டிலுள்ள அனேகமாக எல்லாக் கட்சிகளும் "இந்த ஒரே ஒரு இயக்கம்தான்" தங்களுக்கு எதிர் இயக்கமாக இருந்து வருகிறது என்று சொல்லும்படியாக, கருதும்படியாக, "இதை எப்படியாவது ஒழித்தாகவேண்டும்" என்று திட்டமிட்டுத் தீரும்படியான நிலைமையை அடைந்திருக்கிறது.

இந்த நாட்டில், இன்று பணியில் இறங்கி வேலை செய்துவரும் காங்கரஸ், கம்யூனிஸ்ட், சோஷலிஸ்ட், பிராயனிஸ்ட், இந்துமகா சபை, பார்வோர்ட் பிளாக், முஸ்லிம் லீக் முதலிய கட்சிகளில், இதுவரை முஸ்லிம் லீக் என்பது தவிர, மற்றக்கட்சிகள் யாவும் தங்களுக்குள் "ஒற்றுமை இல்லை" என்பதாகக் காட்டிக் கொண்டாலும், அந்தரங்கத் தத்துவத்தில் ஒன்றாகி, ஒரே மந்திராலோசனை சபையில் கூடி, திராவிடக் கழகத்தை ஒழித்தாலொழிய, தங்களுக்கு இடமில்லை என்கின்ற முடிவுக்கு வந்து, இவையாவும் கட்டுப்பாடாகச், சதியாலோசனையுடன், திராவிடக் கழகத்தை நாசப்படுத்த வேலை செய்து வருகின்றன.

இப்படி இருந்தும் திராவிடக் கழகம் ஒன்றே, இன்று நாட்டில் மற்றெல்லாக் கட்சிகளையும்விட, நல்ல பிரச்சாரவாய்ப்பும், செல்வாக்கும் பெற்றிருப்பதை, யாவரும் காணலாம். தினசரிப் பத்திரிகைகள் எல்லாம், கழகத்தின் நடவடிக்கைகளைத் திரித்துக்கூறி, மக்களுக்குள் விஷத்தை ஊட்டி வருகின்றன. கழகச் செய்திகளை அடியோடு மறைத்து வருகின்றன. அதிகாரிகளுக்கு அதிகமான சலுகை கொடுத்துக் கழகத்தை ஒடுக்கும்படி சர்க்கார் வேலை செய்து வருகின்றது. இன்னும் இதில் எழுத முடியாத வேறு பல தொல்லைகளும் செய்யப்பட்டு வருகின்றன. கழக உணர்ச்சியுள்ள மாணவர்கள், மகா கொடுமைக்கு ஆளாகி வருகின்றார்கள். இன்றும் அடிபட்ட மாணவர்கள் ஆஸ்பத்திரியில் கட்டுகளோடு, திரிந்து கொண்டு இருக்கின்றார்கள்.

கரூர் வழக்கு என்று சொல்லப்படுவதில், தலைவர்களாக இருந்து, நாசவேலை நடத்திய கம்யூனிஸ்டுகளும், காங்கரஸ்காரர்களும், விடுபட்டு, கழகக்காரர்கள் என்கின்ற காரணத்துக்காக 100க்கணக்கான பரிதாபத்துக்குரிய மக்கள் சிறையில் வாடுகிறார்கள். வருஷக்கணக்காக அவர்களது பெண்டு பிள்ளைகள், சோத்துக்கு, துணிக்குத் திண்டாடுகிறார்கள். அரசாங்கம் கடினமான அடக்குமுறை சட்டங்களைச் செய்து வைத்துக்கொண்டு அதற்கு உணவாக்க, வலைபோட்டு கழகத்தைத் தேடித்திரிகிறது. வாழ்க்கையில்

பெரியார்

பெரியார் அவர்கள் 30-10-47 வரை அடியிற்கண்ட இடங்களில் சுற்றுப்பிரயாணம் செய்வார்கள்:-

26-10-47 பட்டணம் (இராசிபுரம், சேலம்)
27— நாமகிரிப்பேட்டை.
28— காதப்பள்ளி
29— பவுத்திரம்
30— நாமக்கல்
31— ஈரோடு

கழகக்காரத் தொழிலாளிகளுக்குக் கேடுசெய்வதும், ஆதரவு தரும் மக்களை அல்லலுறச் செய்வதும், கழகத்தை எதிர்க்கும் கூட்டத்திற்கு, எல்லா வசதிகளும் செய்துகொடுப்பதுமான காரியங்கள், நடந்தவண்ணமிருக்கின்றன. இவ்வளவும் போதாமல் "புழுக்க சாதனத்தின்மீது நாய் மலங்கழித்தது" என்கின்ற பழமொழிப்படி, கழகக்காரர்கள் என்று சொல்லிக் கொள்ளுபவர்களுக்குள்ளாகவே, கழக வளர்ச்சிக்கு, கழகப் பெருமைக்கு, கழகச் செல்வாக்குக்கு கேடுவரும்படியும், மாணவர்கள் இளைஞர்கள் ஆதரவாளர் ஆகியவர்களுக்கு, ஒரு அளவுக்காவது வெறுப்பு அல்லது சலிப்புத்தோன்றும்படியாக, சதியும் விஷமப் பிரச்சாரமும் செய்துவருவதுமான, தொல்லைக்கும், கழகம் ஆளாக வேண்டியதாக இருந்துவருகிறது.

சூழ்நிலையையும், அரசியல் பருவத்தன்மையையும், சீதோஷ்ண நிலைமையையும், அகதிப்புயலையும், சரியானபடி பார்ப்போமானால், முஸ்லிம் லீக்கும் காங்கரசோடு ஐக்கியமாகும் நிலை ஏற்பட்டால், அது அதிசயம் என்று சொல்லமுடியாத நிலையாகவே காணப்படலாம்.

மொத்தத்தில் திராவிடக் கழகத்தின் நிலைபற்றி, மேலே காட்டிய உண்மைகளை, தன்மைகளை, அல்லது, அவற்றில் ஒரு பாகத்தையாவது யாராவது, மறுக்கக்கூடுமா? அல்லது மறுக்கக்கூடியதா? என்பதைக் கழகத்தோழர்கள் முதலில் நடுவுநிலையிலிருந்து, நன்றாய்ச் சிந்தித்துப் பார்க்கவேண்டுமாய், வணக்கத்தோடு வேண்டிக்கொள்ளுகின்றோம்.

மற்றும், கழகத்தில் கலந்து இருந்த தோழர்கள், சேலத்திற்குப் பிறகு, எத்தனைபேர்கள், என்ன என்ன காரணத்துக்குஆக, ஒதுங்கி இருக்கிறார்கள் என்பதையும், சிந்தித்துப் பார்க்கவேண்டுகிறோம். விலகினவர்களில் சிலர், எப்படி எப்படி நடந்துகொண்டார்கள், நடந்து வருகிறார்கள் என்பதையும், சிந்தித்துப் பார்க்க வேண்டுகின்றோம்.

இவைகளை ஏன்? இப்போது எடுத்துக்காட்டுகிறோம் என்றால், "திராவிடக்கழகம் வெறும்பிரச்சாரக் கழகமாகவே இருந்தால், இதில் சேர்ந்த தொண்டர்களும் பிரமுகர்களும் பெரியார் பஜனை செய்து, தொண்டையைக் கிழித்துக்கொண்டு மடிவதுதான் கடமையா? ஏதாவது கிளர்ச்சிசெய்ய வேண்டாமா? பிரச்சாரம் செய்தது போதும்; பிரச்சாரம் பிரச்சாரம் என்று வெறும் கூப்பாடு போடுவதும், வாழ்க! என்று கத்துவதும் போதும்; இந்தச் சர்வாதிகாரப் பாரம் எங்களால் சுமக்கமுடியவில்லை", என்று சில தோழர்கள், சங்கிலித் தொடர்ப் பிரச்சாரம் செய்து, மக்கள் மாணவர்கள் உள்ளத்தை, நஞ்சாக்கி வருவதாலும், ஒவ்வொரு கூட்டங்களிலும், மகாநாடுகளிலும், இந்தக் கோஷ்டியில் பட்ட ஒருவரிருவர், இதைக் கேள்வியாகக் கேட்பதும், மற்றும் பலருடைய திண்ணைப்பிரச்சாரத்திற்கும், நேரப்போக்குப் பேச்சுக்கும், சேதியாய் இருப்பதாலும், மேற்கண்டவைகளைக் குறிப்பிடுகிறோம்.

மற்றும், கழகப்பிரச்சாரத்துக்கு என்று அமர்த்தப்பட்ட, அழைக்கப்பட்ட தோழர்களும், இந்த விஷமக் குறிப்புகளைச் சன்னமாக தங்கள் சொற்பொழிவுகளில், சொல்லாடல்களில், மக்களுக்குள் புகுத்துவதாக, பல இடங்களிலிருந்து பல புகார்கள் வந்ததாலும்வந்துகொண்டிருப்பதாலும் இவைகளைக் குறிப்பிடுகிறோம்.

இவைகள் மாத்திரமல்லாமல், நம்மவர்களில் சிலரும், "திராவிட கழகத்திற்கு திட்டமென்ன இருக்கிறது" என்றுகூட கேட்கும் அளவுக்கு, ஒரு நாகரீகத்தை அடைந்திருப்பதால், அதற்காகவும் விளங்கவைக்க வேண்டியதாயிற்று.

நம் பிரச்சாரம் பயனடையவில்லை என்றோ, அதன் கருத்துக்கள் வெற்றித்துறையைக் காணவில்லை என்றோ, கூறுகிறவர்களுக்குச் சமாதானம் சொல்லும் வேலை, மனக்கெட்ட வேலை என்றே கருதுகிறோம். ஆனால் "கிளர்ச்சி ஏன் செய்யவில்லை? உணர்ச்சி மிகுந்த வாலிபர்களை மாணவர்களைச் சிறைக்குள் ஏன் அனுப்பவில்லை? பிரச்சார உணர்ச்சி வேகம் தணிந்துவிட்டால், திரும்பவும் உண்டாக்க முடியுமா?" என்று கேட்கப்படும் கேள்விகளுக்குப், பதில் சொல்லவேண்டுமென்றே ஆசைப்படுகிறோம்.

முதலாவது, கழகம் இன்று பரிசுத்தப்பட்டதாய், இருப்பதாய் காணப்படவில்லை என்றாலும், வேறு பல பல குறைகள் இருக்கின்றன என்றாலும், அவைகளை நாம் முக்கியமாய்க் கருதவில்லை. மற்றென்னவெனில், நாம் கிளர்ச்சி செய்வதன் மூலம், பொது மக்களுக்குள் ஏற்படும் உணர்ச்சி, இன்று நம் பிரச்சாரத்தின் மூலமும், அரசாங்க நடைமுறை மூலமும், ஒரு அளவுக்கு ஏற்பட்டு வருவதோடு, கொஞ்சகாலம் பொறுத்துக் கிளர்ச்சியைச் செய்வதானாலும்கூட, இன்றைக்குக் கிடைக்கக்கூடிய ஆதரவைவிடச் சற்று, அதிகமான ஆதரவு கிடைக்குமே தவிர, சிறிதும் குறைந்ததாக இருக்க முடியாது. நமக்கு எதிர்ஸ்தாபனமாகிய காங்கரஸ் ஸ்தாபனம், செத்து விட்டது. அது இன்று ஒரு கொடுங்கோல் ஆட்சியாக மாறி விட்டது. அதாவது "தற்கொலை செய்து கொண்டவன் ஆவி பிசாசாக ஆகிவிடுகிறது" என்கின்ற பழமொழிப்படி, இன்று காங்கரஸ் பிசாசு, அதாவது அப்படி ஒன்று இல்லாததும்,

உறுப்பினர் சேர்க்கவும்

★

ஆங்காங்குள்ள கிளைக் கழகங்கள் இந்த ஆண்டுக்கு அங்கத்தினர்கள் சேர்க்கும் வேலையை உடனே துவக்கி பெருவாரியாக புது அங்கத்தினர்களைச் சேர்க்கவேண்டுமென்றும் பழைய அங்கத்தினர்களிடமும் இவ்வாண்டு சந்தாத் தொகையை வசூலிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அங்கத்தினர் சேர்க்கும் ரசீது புத்தகம் வேண்டுவோர், "விடுதலை" நிலையத்திற்கு எழுதவும்.

ஈ. வெ. ராமசாமி

பெயர் காரணமாகவே மக்களைப் பயப்படுத்தி அடக்கிக் கொடுமைப்படுத்துவதாகவும், அதன் பயனாகத்தான் இருப்பதாகக் காட்டிக் கொள்ளவேண்டியதாகவும், இருந்து வருகிறது. இன்று இப்படிப்பட்ட காங்கரசுக்கு, ஆதரவாளர்கள் யார்? என்போமானால், கள்ளமார்க்கட்டுக்காரர்கள், லஞ்சமடிக்கும் அதிகாரிகள், காட்டிக்கொடுக்கும் ஒரு சில சுயநலத் திராவிடர்கள், என்பதோடு, கம்யூனிஸ்ட்டுகள், சோஸலிஸ்ட்டுகள், என்று தங்களைச் சொல்லிக் கொள்ளுகிறவர்களுமே ஆவார்கள்

மற்றும் பிலாக்கள், காங்கிரசு சரிந்துவிடாதபடிக்கு முட்டுக் கோல்கள் ஆவார்கள்.

கம்யூனிஸ்ட்டுகள் இல்லாவிட்டால் இன்று காங்கரசுக்குப் பிரச்சாரக்காரர்களே கிடையாது எனலாம். கம்யூனிஸ்ட்டுகளின் ஓட்டுச் சேகரிப்பு, ஆதரவு இல்லாமல் இருந்தால், சமீபத்தில் நடந்த முனிசிபல் தேர்தல்களில், காங்கரஸ் இன்னும் அதிகமான தோல்வியை அடைந்திருக்கும். காங்கரஸ் இன்றைய தினம கூட்டத்திலும் பாதுகாப்பிலும் மண்டபத்திற்குள் கூட்டம் போடும்படியான தன்மை அடைந்திருப்பதால் அதனால் ஏற்படும் அசௌகரியத்தைப் போக்குவதற்கு, கம்யூனிஸ்ட்டுகள் தான் உதவி செய்து, வசதி செய்து கொடுக்கவும், கம்யூனிஸ்ட் என்ற பெயரால் மானம்பார்த்த இடத்தில், கூட்டம் போட்டு, காங்கரஸ் செய்யவேண்டிய வேலையைக் கம்யூனிஸ்ட்டுகள் செய்தும் வருகிறார்கள் இதில் ஒன்றும் இரகசியம் இல்லை, தத்துவார்த்தம் இல்லை, என்பதற்குத் தெளிவான அறிகுறி என்னவென்றால், இந்தியக் கம்யூனிஸ்ட்டுக் கட்சித் தலைவர் "ஜோஷி" அவர்கள் தனது கம்யூனிஸ்ட்டு சிஷ்யர்களுக்கு "காங்கரசை ஆதரியுங்கள்;—நேரு அரசாங்கத்தை ஆதரியுங்கள்; காங்கரசைப் பலவீனப்படுத்த இடங் கொடுக்காதீர்கள்; கதர் உடையில் இருந்து, காங்கரஸ் கொடியின் கீழிருந்து, மக்களுக்குக் காங்கரஸ்காரராகக் காட்சி அளித்து அதைக் காப்பாற்றுங்கள்" என்பதாகக் கட்டளையிட்டிருக்கிறார்கள் என்பதை, எந்தக் கம்யூனிஸ்டாவது மறுக்க முடியுமா? எந்தக் கம்யூனிஸ்டாவது, நடத்தையில் இதற்கு மாறாக நடந்து கொள்ளுகிறார்களா? என்பதைப் பகுத்தறிவு கொண்டு பார்த்தால் இதன் உண்மை விளங்கும். இந்த நிலை காங்கரஸ் அடைந்ததற்குக் காரணம் என்ன? நாம் காங்கரசுக்கு எவ்வித முட்டுக்கட்டையும் போடவில்லை; சட்ட சபைக்கும் நாம் செல்லவில்லை; காங்கரஸ் எதேச்சாதிகார ஏகபோக ஆட்சியாகவே ஆகி இருக்கிறது; மக்கள் அதற்குப் பயந்து நடுங்குகிறார்கள். அதற்கு வேறு எங்கும் எதிர்ப்பு இல்லை; இப்படி எல்லாம் இருந்தும், காங்கரஸ் இந்த நிலை அடைந்திருப்பதற்குக் காரணம் என்ன? என்று பார்ப்போமேயானால், நமது பிரச்சாரம் என்பதைத் தவிர வேறு காரணம் இல்லை, என்பது நன்றாய் விளங்கும்.

மற்றும் நமது சமுதாயக்கொள்கையும், பொருளாதாரக் கொள்கையும் தான், இன்று காங்கரஸ் கையாளவேண்டியதாக ஏற்பட்டிருப்பதைக் காங்கரஸ் சட்டசபை நடத்தைகளில் காணலாம். இதைச் சரியானபடி செய்கிறார்களா இல்லையோ என்றாலும்; நாம் சொன்னதைத்தான் அவர்கள் சொல்லிக்கொண்டு இருக்கவேண்டியதாகஆகி விட்டது. உதாரணமாக, ஜமீன் சொத்து, மடங்களின் சொத்து, கடவுள்களின் சொத்து, ஆகியவைகளைப்பற்றி, நாம் அதாவது நாமே இந்த நாட்டில் முதல் முதலாகப் பேசும்போது, எழுதும்போது, நம்மைக் கம்யூனிஸ்ட்டுகள், நாஸ்திகர்கள், பிராமண துவேஷிகள், மதத்துவேஷிகள் என்று கூறி, அடக்கியவர்கள் அடக்கச் செய்தவர்கள்தான், இன்று தங்களுக்குள்ளாகவே பேசி, வாதம் செய்துகொள்ளுகிறார்கள். இதை இனி இவர்கள் "கைவிட்டால், நாட்டில் கெட்ட பெயர் வந்துவிடுமே" என்று, பயப்படுகிறார்கள். இதற்கு மக்களிடத்திலிருந்து சிறிதுகூட எதிர்ப்பில்லாமல் ஏராளமான ஆதரவு இருக்கிறது. நாம் கோயில் பிரவேசமென்றபோது துள்ளிக் குதித்த பொதுமக்களும், அடக்கி ஒடுக்கிய அதிகாரிகளும், இன்று வலியக் கூட்டிக்கொண்டுபோய், உள்ளே தள்ளுகிறார்கள். வகுப்பு உணர்ச்சியை அடக்கிவிட்டு, வேறு வேலை பார்ப்பதாகச் சொல்லி, நம்மீது நடவடிக்கை எடுக்கத் தூண்டிய காங்கரசு, இன்று வகுப்பு, மத, இன, துவேஷத்தைத் தங்களுக்குள்ளாகவே கண்டுகொண்டு தொல்லைப்படுகிறது. இப்போது நம் கொள்கை எது காங்கரசில் நுழையாமல் இருக்கிறது என்றால், ஒரே ஒரு கொள்கை என்றுதான் சொல்லலாம். அது என்னவென்றால்; திராவிடநாடு முழு சுயேச்சை பொருந்திய தனி நாடாக ஆக வேண்டும் என்பதாகும். இதுவும், இனியும் இரண்டு மூன்று ஆண்டிற்குள், காங்கரசுக்குள்ளாகவே போராடிக்கொள்ளும்படியானதாக, ஆகிவிடலாம். "பூரண சுதந்திரமுள்ள, சமதர்மக் குடியரசு நாடாக வேண்டும்" என்று ஆந்திராவிலும், தமிழ்நாட்டிலும், சில காங்கரஸ்காரர்கள் வாயைத் திறந்து பேசும்படியான அளவுக்கும், அது மற்றக் காங்கரசுக்காரர்களால் வெளிப்படையாய் ஆட்சேபிக்கமுடியாத அளவுக்கும். அவ்வார்த்தை ஊசலாடி வருகிறது. இது தந்திரத்துக்காக, அதாவது நமது முயற்சியை அழிக்கச்செய்யப்படும் சூழ்ச்சியாக இருக்கலாம். ஆனாலும் இந்த நம் கருத்துக்கள் செல்வாக்குப்பெற்றுவிட்டன. இது எதனால்? நம்பிரச்சாரத்தால் ஏற்பட்டதல்லவா? நாம் ஜில்லாபோர்டு தேர்தல்களில் வெற்றிபெற்று, அவர்களைத் தோற்கடிக்காவிட்டாலும், இன்று காங்கரஸ்காரர்களே தங்களுக்குள் பயந்துகொண்டு ஜில்லாபோர்டை எடுத்துவிட வேண்டுமென்றும், எடுக்காவிட்டால் எதிரிகள் கைப்பற்றிவிடுவார்கள் என்றும், பயப்படுகிறார்களா இல்லையா? முனிசிபல் தேர்தலுக்குக்கூட காங்கரசின்பேரால் போட்டிப்போடவேண்டியதில்லை என்று, காங்கரசார் நினைத்தார்களா? இல்லையா? இந்த நிலை எதனால் ஏற்பட்டது? இதற்குஆக நாம் எந்தக் கிளர்ச்சி செய்து, எத்தனைபேர் அடி உதை பட்டுச் சிறைசென்றோம். நாம் போலீசின் அடி, உதை, சுட்டு

வீழ்த்தல், சிறைவாசப், ஆகியவைகளுக்கு ஆளாகாமலே, இந்த நிலைமை இன்று ஏற்பட்டிருக்கிறது. நாம் காங்கரசாரிடம், நேரடியாக அவர்களுக்கு எவ்விதத் தொல்லையும் கொடுக்காமல், நம் பிரச்சார வேலையை நாம் பார்த்துக்கொண்டிருந்ததாலேயே, அவர்களுக்கு நம்மை நேரடியாய், எதிர்க்கவேண்டிய வேலை இல்லாமல் போய்விட்டதால், அதற்குப் பதிலாக அவர்களுக்குள்ளாகவே ஒருவருக்கொருவர் போராடிக்கொள்ளவும், கட்சிகள் ஏற்படவும், வகுப்பு உணர்ச்சியைப் பெருக்கிக்கொள்ளவும், வசதி ஏற்பட்டுவிட்டது. மற்றும் காங்கரசிலிருக்கும் மக்கள் ஒவ்வொருவராய், நம் கழகத்தில் சேரவும், அல்லது காங்கரசிலிருந்து தனியாய் விலகிக்கொள்ளவுமாய் இருப்பதை, இன்று காணுகின்றோமே ஒழிய, நம்மவர்கள் அதில் போய்ச்சேருகிறவர்களைக் காண முடிவதில்லை.

இவைகள் யாவும், ஒருபுறமிருந்தாலும் இன்று நாம் கிளர்ச்சி செய்யவேண்டும் என்பதற்கு அவசியமான இலட்சியம் என்ன? வேறு வழியில், மக்களை வசப்படுத்த முடியாதவர்களுக்கு, அல்லது பதவி இலட்சியமே முக்கியமாய்க் கொண்டவர்களுக்கு, மற்றும் போலித்தியாகிகளை, வீரர்களை, உற்பத்திசெய்து, அவர்களால் பதவிப்பங்கு போட்டுக்கொள்ளுகிறவர்களுக்கு, கிளர்ச்சி அவசியமேயாகும். நாம் இன்று அந்த நிலையில் இல்லை. பிரசாரமூலம், நம் கருத்தைச் செலுத்த நல்ல வசதிபெற்றிருக்கின்றோம். நமக்கு மக்களிடம், ஒட்டுப்பெறும்படியான ஆதரவு, செல்வாக்கு, இல்லாவிட்டாலும், காங்கரசிடம் மக்களுக்கு வெறுப்பு ஏற்படும்படியான தன்மை, தானாக ஏற்படும்படி நம் பிரச்சாரம் செய்து வருகின்றது. நாம் செய்யவேண்டிய சீர்திருத்தங்களை, காங்கரசாரே செய்து தீரவேண்டிய சூழ்நிலையை உண்டாக்கி வருகின்றது. காங்கரசுக்கு எதிர்ப்பில்லை என்கின்ற காரணத்தால், அதாவது நாம் கிளர்ச்சி செய்யாததால், நிர்வாகத்தில் அவர்கள் செய்துவரும் அக்கிரமம், நாணயக்குறைவு, அவர்களுக்கு பாமரமக்களிடம், தானாகவே வெறுப்பு ஏற்பட்டுவருகிறது என்பதுடன், இன்னும் அதிகமாக ஏற்படுத்துவதற்கு நாம் தடையாயில்லாமல் இருப்பதையே ஒக்கும். இப்படியாக இன்று இதில் எழுத வசதி இல்லாததான, அநேக காரணங்களால் இப்போது நாம் கிளர்ச்சி செய்யவேண்டிய அவசியம், அவசரம், இல்லை என்பதே, நமது தாழ்மையான கருத்தாக இருக்கிறது. நம் காரியங்கள் பிரச்சாரமே என்றாலும், அப்பிரச்சாரம், கிளர்ச்சியே கூடாதென்பதல்ல என்பதையும், தெரிவித்துக் கொள்ளுகிறோம். கிளர்ச்சியை நல்ல முறையில், அவசியமான முறையில், பயன் தரத்தக்க முறையில், துவக்க அல்லது தானாகவே ஏற்பட, நம் பிரச்சாரமும், மற்றும் நடைபெறும் நமது வேலைகளும், பயன்பட்டுவரும் என்பதிலும், நம்மையும் அறியாமல், நாமும் எதிர்பாராமல் நமக்கும் அதில் பொறுப்பு இல்லாமல் திடீரென்று தானாகவே கிளர்ச்சி ஏற்பட்டு விடலாம் என்பதையும், நாம் மறுக்க முடியாது.

கிளர்ச்சியில் செயற்கைக் கிளர்ச்சி, இயற்கைக் கிளர்ச்சி என்று இரண்டு வகை உண்டு. காங்கரஸ் செய்த கிளர்ச்சி அவ்வளவும், செயற்கைக் கிளர்ச்சியேயாகும். அதனால் தலைவர்களுக்கும் ஈடுபட்டவர்களுக்கும் பதவி, பணம், என்பதல்லாமல், மக்களுக்கு யாதொரு பயனும் கிடைக்காது. இயற்கைக் கிளர்ச்சியால், தலைவர்கள், ஈடுபட்டவர்கள், துன்பப்படுவார்கள் என்பதோடு, மக்களுக்கு ஏராளமான பயன் ஏற்படும். ஆதலால் கிளர்ச்சி துவக்கப்படுவதாக இருந்தாலும், இயற்கையில் எழும்படியாகவே துவக்கப்படவேண்டும். அப்பொழுது அந்தக் கிளர்ச்சிக்கு ஒரு கூட்ட மக்கள் மாத்திரம் சம்மந்தப்பட்டவர்கள் என்பதாக இல்லாமல், பொதுமக்கள் யாவருமே சம்மந்தப்பட்டவர்களாக ஆகிவிடுவார்கள். வெற்றி தோல்வி, பொதுமக்களுக்கே சொந்தமாகும். பொறுப்பும் பொதுமக்களுக்கே சொந்தமாகும். ஆதலால் பிரச்சாரம் நல்ல பிரச்சாரமாக இருந்தால், அந்தப் பிரச்சாரம் தானாகக் கிளர்ச்சியைக் கொண்டு வந்து விடும் என்பதாகக் கருதிக் கொண்டு, நாணயமான முறையில் பிரச்சாரம் செய்து கொண்டு வந்தால், கிளர்ச்சி ஏற்படும் தன்மையையடைந்து விடலாம் என்றே கருதுகின்றோம்.

இன்று காங்கரஸ் ஆட்சியை, அல்லது இன்றையச் சுதந்திர சுயராஜ்ய ஆட்சி என்பதை, நம்மை மறந்து தனக்குள்ளாகவே, போராட்டம் நடத்திக்கொள்ளும் தன்மையை அடையும் நல்வாய்ப்பை விட்டு, நம் பக்கம் திருப்பி அதன் கட்டுப்பாட்டிற்கும் ஒற்றுமைக்கும் நாம் உதவி செய்யாமல், நம் வேலையை, அதாவது வெளிப்படையாக நம்மைப்பற்றிக் கவலை எடுத்துக்கொள்ளும் அவசியம் கூடுமானவரை காங்கரசுக்கு இல்லாமலிருக்கும்படியாக, நாம் இனியும் சிறிது நாட்களுக்கு, இதே முறையில் தொண்டாற்றி வருவோமாக!

கிளர்ச்சி கிளர்ச்சி என்று கூப்பாடு போடுகிறவர்களிலும் இரண்டு வகை உண்டு. அதாவது பொறுப்பு இல்லாமல், உண்மைக் கவலை, உழைப்பில்லாமல், வீறாப்புப் பேசி, கிளர்ச்சி ஏன் நடக்கவில்லை என்று குறை கூறி, நாமில்லாமல் இயக்கம் நடப்பதா? என்று எப்படியாவது, இயக்கத்தைப் பள்ளத்தில் தள்ள நினைத்து, கூப்பாடு போடுவதும், அனுபவமற்ற மக்களிடம் விஷமப்பிரச்சாரம் செய்வதும் ஒரு வகையாகும்.

இயக்கத்தின் இன்றைய நிலையைக்கண்டு, இது சமயம் ஒரு கிளர்ச்சி துவக்கினால், நல்ல ஆதரவு இருக்குமே என்று கருதி, நல்லெண்ணத்துடன் ஆசைப்படுகிறவர்கள் மற்றொரு வகையாகும்.

நாம் மேலே காட்டிய கருத்துக்கள், பின்னால் குறிப்பிட்டவர்களுக்கேயாகும் என்பதைக் கூறி இதை முடிக்கின்றோம்.

கரூர் வழக்கு நிதிக்கமிட்டி அறிக்கை

கரூர் வழக்கு 7-யும் தொடர்ந்தாற்போல் 27—10—47 கேசி முதல் திருச்சி செஷன்ஸ் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்போகிறார்கள்; சுமார் ஒரு மாதத்திற்கு விசாரணை நடைபெறக்கூடும்.

இதுவரை வரவு, செலவு விபரம் கீழ்வருமாறு —

வரவு

தலைவர் டி. பி. வேதாசலம் அவர்களிடமிருந்து	ரூ. 250—0—0
மணியார்டர் மூலமும், ஜாமீனில் வெளியில் உள்ள கரூர் வழக்குத் தோழர்கள் மூலமும் நன்கொடை வசூல்	,, 761—12—0
தோழர் சி. என். அ அவர்களின் "நீதி தேவன் மயக்கம்" நாடக மூலம்	,, 5161—12—6
	6173—8—6

செலவு

நாடக செலவு:- வரி, அச்சுக்கூலி, நடிகர்கள் பிரயாணச்செலவு உள்பட	ரூ 2299—12—0
வக்கீல் செலவு	,, 2650—0—0
பிரயாணச் செலவு, வழக்கு சம்பந்தமான மற்ற செலவுகள், அச்சுக்கூலி வகைகள்	,, 651—0—0
கரூர் வழக்கில் சம்பந்தப்பட்ட தோழர்கள் வசம் கொடுத்திருப்பது	,, 175—0—0
	5775—12—0
மீதி இருப்பு	397—12—6

சென்னை வக்கீல்கள் வழக்குக்கு ஆஜராவதானால் அந்த வகைக்காக மட்டுமே இன்னும் சுமார் ரூ. 7500-0-0 தேவைப்படுகிறது. ஷை தொகையில் ரூ. 5000-0-0 வரை ஜாமீனில் வெளியிலிருக்கும் தோழர்கள் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறார்கள்; ஆனால் ரூ 1300-0-0 மட்டும் வசூலாயிருக்கிறது. அந்தத் தொகை ஷை கணக்கில் சேர்க்கப்படவில்லை. மேற்கண்டபடி வாக்களித்த மற்ற தோழர்களும் தொகை கொடுத்தால் மட்டுமே சென்னை வக்கீல்கள் வழக்குக்கு ஆஜராக ஏற்பாடு செய்ய இயலும். இல்லாவிட்டால் திருச்சி வக்கீல்களைக் கொண்டே வழக்கை நடத்திவிடவேண்டிய நிலையிலிருக்கிறோம்.

வழக்கில் சம்பந்தப்பட்ட ஷை தோழர்கள் வாக்களித்தபடி தொகை கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும் நாம் வழக்கை நடத்துவதற்கு எப்படியும் இன்னும் ரூ 2500 ஆவது தேவைப்படுகிறது. ஆகவே இயக்கத்தோழர்கள் தயவு செய்து தங்களாலான பொருளுதவியை உடனே அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

P. ஷண்முகவேலாயுதம்,
காரியதரிசி, கரூர் வழக்கு நிதிக்கமிட்டி, ஈரோடு.

(2ம் பக்கத்தொடர்ச்சி)

ஏழை பங்காளர் என்று பேசும் நீங்கள் எண்ணிப்பாருங்கள். கிழித்தால் நான்கு கோவணத்திற்காவது ஆகுமே; நான்கை தைத்தால் இடுப்புக்கு ஒரு சுற்றாவது வருமே என்று கருதுவதனால் இல்லையா? இவ்வாறு கருதினால் அதில் நீங்கள் தவறு சொல்லமுடியுமா?

நாட்டிலே உடைப்பஞ்சம் என்று பேசப்படும் நேரத்திலே, வந்திருக்கும் பிறநாட்டுத் தூதுவர்கள்தான் என்ன நினைப்பார்கள்? உடைப்பஞ்சம் என்று கணக்குக் காட்டுகிறார்கள்; ஊருக்குள்ளே என்னடா என்றால், ஓராயிரங் கொடியா? காணாத மூளி கஞ்சியைக் கண்டதைப் போலல்லவா இருக்கிறது? என்று நினைப்பார்களா? இல்லையா? இவ்வாறு நினைத்தால் அதிலென்ன தவறு.

பத்தி சிகாமணி

கறுப்புக்கொடியைப் பறக்கவிட முடியாது என்று சட்டஞ் செய்வதினால், இந்திய யூனியன் கொடிக்குப் பெருமையை யுண்டுபண்ணலாம்; திராவிடர் இயக்கத்தை நசுக்கிவிடலாம்; என்று அமைச்சரே! நீர் முயற்சிப்பீராயின், தாலி இல்லாமலே திருமணங்கள் பல நடத்திவரும் திராவிட நாட்டிலே சீட்டை ஒளித்துவைத்துத் திருமணத்தை நிறுத்திவிடலாமென்று எண்ணிய புத்தி சிகாமணிக்கே ஒப்பானவர் ஆவீர்; என்று மக்கள் உம்மைக் குறித்து நினைப்பார்களா? இல்லையா?

சரணம்

எழுத்துக்களை எண்ணிப்பார்த்து, பாட்டு முடிகின்ற பாவாணர்கள், மற்றவர் பாடிவைத்திருக்கின்ற பாட்டின்ற ஓலைகளிலே (தொடர்களிலே) அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பொறுக்கி, எப்படியும் முடித்துவிடவேண்டுமே என்று கவலைப்படுவார்கள். அந்தப் பாவாணர் நிலையைத்தான் நமது மதி மந்திரி அடைந்து விட்டார். எப்படியாவது சரணம் பாடவேண்டும்? என்ற அவசர நிலையிலேதான் சரணத்தை அமைத்திருக்கவேண்டும்.

மற்றைய நிலையங்கள் தத்தம் கொடிகளை வைத்துக் கொள்ளலாம். ஆனால் அவைகள் தத்தம் கொடிகளைப் பறக்கவிடக்கூடாது என்று அறிவுக்கண்களை அடைத்து விட்டு சரணத்தை முடித்திருக்கின்றார்.

கொடியை வைத்துக்கொள்ளலாம். ஆனால் பறக்கவிடக்கூடாது. என்ன விசித்திரமான கட்டளை? இந்த மாதிரியான கட்டளை, வேறு எந்த அரசிலாவது பார்க்க முடியுமா? கேட்க முடியுமா? தண்ணீரை வைத்துக்கொள்ளலாம்; ஆனால் தாகத்திற்கு அதைப் பருகிவிடக்கூடாது. செல்வத்தை வைத்துக்கொள்ளலாம்; ஆனால் தேவைக்குச் செலவு செய்துவிடக்கூடாது என்று கட்டளை போடுவதற்கும் இதற்கும் என்ன வேறுபாடு? தாகத்திற்கு உதவாத தண்ணீர்; தரித்திரத்திற்கு உதவாத செல்வம்; தண்ணீரும் செல்வமும் எட்டிச் சுரைக்காய்கள். இது விவேக சிந்தாமணி.

இவர் யாரோ

பறக்காத கொடியும், ஓடாத கெடிகாரமும், பாடாத கிராமபோனும், பச்சைக் குழந்தைகளுக்கல்லவா வேண்டும்? பறக்காத கொடியை வைத்துக் கொள்ள பக்தவத்ஸலத்தின் கட்டளை எதற்கு? சத்திரத்துச் சாப்பாட்டிற்கு சுப்பணையங்கார் உத்திரவு ஏன் என்று தொந்திவாடாத பாப்பிருமங்கள் சொல்லி வருவதை, அமைச்சர் கேட்டிருக்கிறாரோ இல்லையே? நாமறியோம். ஆனாலும் சொல்லுகிறோம். இந்த யோசனை வேண்டாம். மிக விபரீதமாகும். இதனால், மொழி முரசைக் கொட்டி இன உணர்வை எழுப்பிய திராவிடன், கொடி முரசைக்கொட்டி இவ் ஆட்சியை எழுப்ப உதவி செய்யப் போகின்றாரோ? என்னமோ?

Edited, Printed and Published by N. Karivaradas amy at the Tamilian Press 42, Cutchery street, ERODE.

மானத்தை அழிக்க, வருகிறது தீபாவளி.